ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා මණ්ඩලයේ මෙහෙයුම් කමිටුව

# අධිකරණය පිළිබඳ අනුකාරක සභාවේ

# වාර්තාව

*அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தற் குழு*

# *நீதித்துறை பற்றிய உப குழுவின்*

# *அறிக்கை*

**The Steering Committee of the Constitutional Assembly**

# REPORT

# of the

# Sub-Committee on Judiciary

**අධිකරණය පිළිබඳ අනුකාරක සභාව**

# වාර්තාව

**1.** අධිකරණය පිළිබඳ අනුකාරක සභාව පහත සඳහන් ගැටලු පිළිබඳව අවධානය යොමු කළ අතර, එහි වාර්තාව එම ගැටලු මත පදනම් විය.

(අ) අධිකරණයේ ස්වාධීනත්වය

(ආ) අධිකරණ සංවිධාන ව්‍යුහය

(ඇ) අධිකරණ සමාලෝචනය ඇතුළුව අධිකරණවල අධිකරණ බලය

(ඈ) ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණය හා එහි අධිකරණ බලය

**2. අධිකරණයේ ස්වාධීනත්වය.**

වර්තමාන ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවෙහි XV පරිච්ඡේදය [අධිකරණය] තුළ "අධිකරණයේ ස්වාධීනත්වය" යන අනු මාතෘකාව යටතේ වගන්ති කිහිපයක් අන්තර්ගත වුවද, එකී වගන්ති මූලික වශයෙන්ම අදාළ වනුයේ ශ්‍රේෂ්ඨාධිකරණයෙහි සහ අභියාචනාධිකරණයෙහි විනිසුරුවරුන් පත් කිරීම, ධුර කාලය,-සේවයෙන් ඉවත් කිරීම, විශ්‍රාම ගනු ලබන වයස සහ වැටුප් පිළිබඳව වන අතර, රටෙහි අධිකරණයෙහි ස්වාධීනත්වය යන මූල ධර්මය තහවුරු කිරීමේ වැදගත්කම හා අවශ්‍යතාව නියම කරනු ලබන ප්‍රකාශිත විධිවිධානයක් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව තුළ නොමැත.

අධිකරණ ක්ෂේත්‍රය තුළ රට මුහුණ පා ඇති අත්දැකීම් සැලකිල්ලට ගනිමින්, අධිකරණයේ ස්වාධීනත්වය පිළිබඳ මූල ධර්මය තහවුරු කිරීම හා ආරක්ෂා කිරීම සඳහා කිසියම් ප්‍රකාශිත විධිවිධාන ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව තුළට ඇතුළත් කිරීම සුදුසු බවට අනුකාරක සභාව නිර්දේශ කරයි. රාජ්‍යයෙහි විධායකය හා ව්‍යවස්ථාදායකය යන ආයතනවලින් අධිකරණය ස්වාධීන බවට සහ අධිකරණයේ කටයුතු හා ක්‍රියාවලීන්ට මැදිහත්වීමට කිසිදු බලධාරියකුහට කිසිදු බලයක් නොමැති බවට ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව විසින් පැහැදිලි විධිවිධාන සැලසිය හැකිය. විනිසුරුවරුන් විසින් සිය කාර්යයන් හා කර්තව්‍යයන් ඉටු කිරීමේදී කිසියම් පුද්ගලයකු හෝ බලධාරියකු විසින් ඍජුවම හෝ අනියම් ලෙස සිදු කරනු ලබන කිසියම් වූ සීමා කිරීම්, බලපෑම්, මැදිහත්වීම්, පෙළඹවීම්, බියගැන්වීම්වලින් තොරව ක්‍රියා කළ යුතු බවට සහ නීතිය හා කරුණු බවට තමා විසින් කල්පනා කරනු ලබන ආකාරයට අදාළ කරුණු කෙරෙහි නීතිය යොදවමින් අධිකරණමය හෘදය සාක්ෂියට අනුකූලව කටයුතු කළ යුතු බවට ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව විසින් තවදුරටත් විධිවිධාන සැලසිය හැකිය.

මේ සම්බන්ධයෙන් දකුණු අප්‍රිකානු ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව විසින් ඉතා හොඳ මාර්ගෝපදේශයක් ලබා දෙනු ලැබේ. 165වන වගන්තිය ප්‍රකාරව විධිවිධාන සලසා දෙනු ලබන පරිදි "අධිකරණ ස්වාධීන ආයතන වන අතර, ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවට හා නීතියට පමණක් යටත්ව ක්‍රියා කරනු ලබයි; ඒවා විසින් අපක්ෂපාතී ලෙස සහ කිසිදු බියකින්, අනුග්‍රහය දැක්වීමකින් හෝ අගතියකින් තොරව නීතිය ක්‍රියාත්මක කරනු ලැබේ"; "කිසිදු පුද්ගලයකු හෝ රජයේ ආයතනයක් අධිකරණයේ කටයුතුවලට මැදිහත් නොවිය යුතුය" "අධිකරණවල ස්වාධීනත්වය, අපක්ෂපාතී

බව, ගරුත්වය, යුක්තිය කරා ප්‍රවේශ වීමට ඇති ඉඩකඩ සහ අධිකරණවල කාර්ය සාධකත්වය තහවුරු කිරීම සඳහා රාජ්‍ය ආයතන විසින් නීති සම්පාදනය හා අනිකුත් පියවර මගින් අධිකරණයට සහාය වීම සහ ආරක්ෂා කිරීම සිදු කළ යුතු වේ."

ජනතාවගේ අධිකරණ බලය ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව මඟින් ඍජුවම අධිකරණ වෙත පැවරීම අත්‍යාවශ්‍ය හා යෝග්‍ය කටයුත්තක් වේ. එකී අධිකරණ බලය පාර්ලිමේන්තුව මඟින් අධිකරණ හා විනිශ්චය සභා හරහා ක්‍රියාත්මක කරනු ලබන වර්තමාන ක්‍රමවේදය අසතුටුදායක වන අතර, එය වෙනස් කළ යුතු වේ. මෙමඟින් අධිකරණයේ ස්වාධීනත්වය පිළිබඳ මූල ධර්මය තවදුරටත් ශක්තිමත් කිරීමද සිදු කරනු ඇත.

අනික් අතට, විශේෂිත විනිශ්චය කිරීමේ බලතල සහ විකල්ප ආරවුල් නිරාකරණ බලතල හිමි ආයතන එනම් අර්ධ අධිකරණ ආයතන අධිකරණය වෙත පැවරී ඇති අධිකරණමය බලය අනුපූරණය කරනු පිණිස නියත කරුණු අරභයා පාර්ලිමේන්තුව විසින් සම්මත කරනු ලබන නීති ප්‍රකාරව පිහිටුවිය හැකිය.

ශ්‍රේෂ්ඨාධිකරණයේ සහ අභියාචනාධිකරණයෙහි විනිසුරුවරුන් පත් කිරීම, සේවා කාලය, විශ්‍රාම යාම, සේවයෙන් ඉවත් කිරීම, විනය පාලනය, වැටුප්, විශ්‍රාම ප්‍රතිලාභ, විශ්‍රාම ලැබූ පසු රැකියා අවස්ථා ලබා දීම, වෙනත් සේවාවන් සඳහා ඔවුන් යෙදවීම පිළිබඳ ප්‍රතිඥාවන්ට අමතර ප්‍රකාශිත ප්‍රතිඥාවන් මෙහි අන්තර්ගත වේ.

මේ සම්බන්ධයෙන් පහත සඳහන් නිර්දේශ ඉදිරිපත් කරනු ලැබේ.

**පත් කිරීම:-**

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවට හිටපු ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරුවරුන්ගෙන් සැදුම් ලත් මණ්ඩලයක් වෙතින් ලද නාම යෝජනා අනුව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවේ නිර්දේශය මත උපරිමාධිකරණවල විනිසුරුවරුන් ජනාධිපතිවරයා විසින් පත් කළ යුතු වේ. එම හිටපු ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරු මණ්ඩලයට හිටපු අගවිනිසුරුවරයෙකුද ඇතුළත් වන අතර එකී මණ්ඩලය සඳහා දැනට ධුරයේ සිටින අගවිනිසුරුවරයා විසින් නීතිපතිවරයා සහ නීතිඥ සංගමයේ සභාපතිවරයා සමඟ සාකච්ඡා කොට සාමාජිකයන් නම් කළ යුතු වේ. හිටපු ශ්‍රේෂ්ඨාධිකරණ විනිසුරුවරුන් මෙම මණ්ඩලයට පත් කිරීමේදී ඔවුන් විශ්‍රාම ලැබූ දිනය හා ඔවුන් මෙම මණ්ඩලයට පත් කරනු ලබන දිනය අතර අවම වශයෙන් අවුරුදු දෙකක කාල පරිච්ඡේදයක් ගත වී තිබිය යුතු වේ.

**විශ්‍රාම ගැනීමේ වයස:-**

සියලුම උපරිමාධිකරණ විනිසුරුවරුන්ගේ විශ්‍රාම ගැනීමේ වයස එකම වයසක් විය යුතු අතර එම වයස අවුරුදු 65 වේ නම් වඩාත් සුදුසු වේ. සමහර විනිසුරුවරුන් විශ්‍රාම ලැබූ පසු ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවේ නිර්දේශය මත පහළ අධිකරණවල විනිසුරුවරුන්ගේ නිපුණතාවය සහ සේවා සැපයීම දියුණු කිරීම හා වැඩිදියුණු කිරීම උදෙසා එම විනිසුරුවරුන්හට උපදෙස් ලබා දීම සහ ඔවුන් අධීක්ෂණය කිරීම සඳහා සේවයේ යෙදවිය හැකිය. මෙම විනිසුරුවරුන්ට වයස අවුරුදු 70 දක්වා සේවය කල හැක.

**විනිසුරුවරුන්ගේ වැටුප්: -**

උපරිමාධිකරණවල විනිසුරුවරුන්ගේ වැටුප් පාර්ලිමේන්තුව විසින් තීරණය කළ යුතු අතර එම වැටුප් විනිසුරුවරුන් ධුරය දරන කාලය තුළදී අඩු නොකළ යුතු වේ. සියලුම උපරිමාධිකරණවල විනිසුරුවරුන්ගේ වැටුප් එක සමාන විය යුතුය.

**විනය පාලනය සහ සේවයෙන් පහ කිරීම:-**

උපරිමාධිකරණ විනිසුරුවරුන්ගේ විනය පාලනය හා සේවයෙන් පහ කිරීම සඳහා උපරිමාධිකරණ විනිසුරුවරුන්ගේ විනය පාලන කොමිෂන් සභාවක් තිබිය යුතු අතර ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවේ නිර්දේශය මත ජනාධිපතිවරයා විසින් එහි සාමාජිකයන් පත් කළ යුතු වේ. කිසියම් විෂමාචාරයක් හෝ අබලතාවයක් පිළිබඳ චෝදනා එම කොමිෂන් සභාව විසින් විමර්ශනය කර ඒ පිළිබඳ වාර්තාවක් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවට ඉදිරිපත් කළ යුතු වේ. එවැනි කිසියම් විනිසුරුවරයකු සේවයෙන් පහ කිරීම සඳහා ජනාධිපතිවරයා වෙත නිර්දේශ කිරීමේ බලය ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව සතු වන අතර ජනාධිපතිවරයා විසින් ඉන් අනතුරුව එකී විනිසුරුවරයා සේවයෙන් පහ කළ යුතු වේ. කෙසේ වුවද එලෙස විනිසුරුවරයෙකු සේවයෙන් පහ කිරීම සඳහා ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව විසින් කරනු ලබන නිර්දේශය ජනාධිපතිවරයා වෙත යැවීමට ප්‍රථම එකී නිර්දේශය පාර්ලිමේන්තුව විසින් අනුමත කළ යුතු වේ.

**විශ්‍රාම ගැන්වීමේදී ගෙවීම් :-**

උපරිමාධිකරණවල විනිසුරුවරුන් හට ඔවුන් විශ්‍රාම ලබන අවස්ථාවේදී ලැබුණු ඒකාබද්ධ පාරිශ්‍රමිකය (වැටුප සහ දීමනා) හෝ ප්‍රවර්තන කාලයෙහි විනිසුරුවරුන්හට ලැබෙන ඒකාබද්ධ පාරිශ්‍රමිකය (වැටුප හා දීමනා) යන දෙකින් වැඩි පාරිශ්‍රමිකය විශ්‍රාම වැටුප ලෙස ලබා දිය යුතු බව කාරක සභාවේ මතය වේ.

**දැනට සේවයේ නියුතු හෝ විශ්‍රාම ලැබූ විනිසුරුවරුන්හට වෙනත් කාර්යයක් සිදු කිරිම සඳහා ආරාධනා කිරීම:-**

වෙනත් කාර්යයක් ඉටු කිරීම සඳහා සේවයේ නිරත කරවීමට විනිසුරුවරුන් යෝග්‍ය වුවද, උපරිමාධිකරණවල විනිසුරුවරුන්ගේ ස්වාධීනත්වය සැබැවින්ම නැති වී යන සහ එලෙස නැති වී යතැයි සිතිය හැකි තත්ත්වයක් උදාවීම වැළැක්වීම සඳහා වැටුප් ලබන හෝ වැටුප් නොලබන කිසියම් කාර්යයක් සිදු කිරීමට භාර ගැනීමට දැනට සේවයේ නියුතු හෝ විශ්‍රාමික විනිසුරුවරුන්හට අවසර ලබා නොදීම යෝග්‍ය බව අනුකාරක සභාවේ මතය වේ. කෙසේවුවද, උපරිමාධිකරණවල සහ අනිකුත් අධිකරණවල විනිසුරුවරුන්හට සීමිත කෙටි කාල සීමාවන් කීපයක් විදේශීය අධිකරණවල සේවය කිරීමට අවසර ලබා දී විදේශීය රටවල අත් දැකීම් ලබා ගැනීමට අවස්ථාව ලබා දීම සම්බන්ධයෙන් අනුකාරක සභාවේ විරුද්ධත්වයක් නොමැත. උපරිමාධිකරණවල විනිසුරුවරුන්හට ඔවුන්ගේ නිලය හා පුහුණුව සඳහා යෝග්‍ය තනතුරු භාර ගැනීමට අවසර දෙනු ලැබූ කල්හි එම කාල පරිච්ඡේදය තුළදී ඔවුන්හට වැටුප් රහිත නිවාඩු ලබා දිය යුතු වේ. මේ සඳහා අනුමැතිය ලබා දීමේදී විදේශීය රටවල අධිකරණ පද්ධති සහ ප්‍රජාතාන්ත්‍රීය ස්වභාවය පිළිබඳවද අවධානය යොමු කළ යුතු වේ. එවැනි ඉල්ලීම් සඳහා අවසර ලබා දීමේ බලය ඇත්තේ ජනාධිපතිවරයාට වන අතර ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව විසින් ඒ සඳහා තම නිර්දේශය ජනාධිපතිවරයාට ලබා දීමට පෙර එකී ඉල්ලීම් ඇගයීමට ලක් කළ යුතු වේ.

මෙහිදී, මෙලෙස විනිසුරුවරුන් කෙටි කාලයක් සඳහා විදේශගත වීම නිසා ඇති වන පුරප්පාඩු පිරවීමට සහ රටෙහි අධිකරණයෙහි ගුණාත්මකභාවය ඉහළ නැංවීම සහ පෝෂණය කිරීම සඳහා උපරිමාධිකරණ සඳහා කෙටි කාලීනව විටින් විට සිදු කරනු ලබන විනිසුරුවරුන්ගේ පත් කිරීම ප්‍රධාන පෙළේ නීතිඥවරුන් අතුරින් සිදු කළ හැකි බව අනුකාරක සභාවේ අදහස වේ.

**3. අධිකරණ සංවිධාන ව්‍යුහය.**

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව මඟින් පිළිගත යුතු අධිකරණ සංවිධාන ව්‍යුහය පහත දැක්වෙන පරිදි විය යුතුය.

ශ්‍රේෂ්ඨාධිකරණය

↓

අභියාචනාධිකරණය සහ පළාත්බද අභියාචනාධිකරණ

↓

ශ්‍රී ලංකාවේ මහාධිකරණය

අනිකුත් අධිකරණ සහ ඒවායේ ව්‍යුහය සම්බන්ධයෙන් පාර්ලිමේන්තුව විසින් සම්මත කරනු ලබන නීති ප්‍රකාරව විධිවිධාන සැලසිය යුතු වේ. දිසා අධිකරණය, පවුල් අධිකරණය, මහේස්ත්‍රාත් අධිකරණය, ප්‍රාථමික අධිකරණය/ සුළු හිමිකම් අධිකරණය අනිකුත් අධිකරණ විය යුතු බවට අනුකාරක සභාව පිළිගනියි.

**4. අධිකරණවල සංයුතිය හා අධිකරණ බලය.**

**ශ්‍රේෂ්ඨාධිකරණය** විනිසුරුවරුන් පහළොස්දෙනෙකුගෙන් සමන්විත වේ. රටෙහි අවසාන අභියාචනා අධිකරණ බලය ඇත්තේ මෙම අධිකරණය වෙතය. එම අධිකරණයට කිසිදු ප්‍රථමවර අධිකරණ බලයක් නොමැත.

**අභියාචනාධිකරණය** විනිසුරුවරුන් හතළිස් පස්දෙනෙකුගෙන් සමන්විත විය යුතුය. පළාත් බදව අභියාචනාධිකරණ ස්ථාපිත කල යුතු අතර, එම අධිකරණ අදාළ පළාත්බද අභියාචනාධිකරණයන් ලෙස හැඳින් වේ. අභියාචනාධිකරණයේ සභාපති විනිසුරුවරයා විසින් පළාත්බද අභියාචනාධිකරණවල නඩු විභාග කරන විනිසුරුවරුන් අභියාචනාධිකරණයේ විනිසුරුවරුන් අතුරින් නම් කළ යුතු වේ. අභියාචනාධිකරණයේ විවිධ අංශ ද තිබිය හැකිය. උදාහරණයක් ලෙස අභියාචනාධිකරණයෙහි අපරාධ අංශයක් සහ වාණිජ අංශයක් ඇත.

මූලික අයිතිවාසිකම් සහ රිට් ආඥා නිකුත් කිරීම සඳහා අධිකරණ බලය අභියාචනාධිකරණය සතු වනු ඇත. මුල් අවස්ථා අධිකරණ එනම් මහාධිකරණය, දිසා අධිකරණය, පවුල් අධිකරණය, මහේස්ත්‍රාත් අධිකරණ, සහ ප්‍රාථමික අධිකරණ/සුළු හිමිකම් අධිකරණ වෙතින් සිදු කරනු ලබන අධිකරණ කටයුතු පිළිබඳ අභියාචනා අධිකරණ බලය මෙම අධිකරණය සතු වනු ඇත. කම්කරු විනිශ්චය සභාව, ගොවිජන සේවා විනිශ්චය සභාව සහ ඒ හා සමාන අර්ධ අධිකරණ ආයතන වෙතින් යොමු වන අභියාචනා ද අභියාචනාධිකරණය විසින් විභාග කළ හැකිය.

**ශ්‍රී ලංකාවේ මහාධිකරණය.**

බරපතළ අපරාධ සම්බන්ධයෙන් අපරාධ අධිකරණ බලය පැවරී ඇත්තේ මහාධිකරණය වෙතය. මහාධිකරණය විසින් ලබා දෙන ලද තීන්දු හා සම්බන්ධ අභියාචනා අභියාචනාධිකරණයේ අපරාධ අංශය හෝ කොළඹ පිහිටි අපරාධ අභියාචනාධිකරණය විසින් විභාග කළ යුතු වේ. රිට් ආඥා නිකුත් කිරීම හෝ අභියාචනා හා සම්බන්ධ කිසිදු අධිකරණ බලයක් මහාධිකරණය සතු නොවනු ඇත.

**5. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණය හා එහි අධිකරණය බලය.**

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව හා සම්බන්ධයෙන් වැදගත් වන ගැටලු ක්ෂේත්‍රයෙහි විශේෂඥවරුන් විසින් විනිශ්චය කිරීමේ අවශ්‍යතාව හඳුනා ගනිමින්, ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවෙහි නිර්දේශය මත ජනාධිපතිවරයා විසින් පත් කරනු ලබන සාමාජිකයන්/විනිසුරුවරුන් හත් දෙනෙකුගෙන් සමන්විත ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණයක් පිහිටුවිය යුතු බවට අනුකාරක සභාව නිර්දේශ කරයි. අධිකරණ ක්ෂේත්‍රය තුළ කීර්තියක් ලබා ඇති සහ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා නීතිය පිළිබඳ විශේෂ දැනුමක් සහිතව නෛතික අධ්‍යාපනයක් හෝ පරිචයක් ලබා ඇති පුද්ගලයන් අතුරින් මෙහි සාමාජිකයන් තෝරා ගත යුතු වේ. අවුරුදු පහක කාල පරිච්ඡේදයක් සඳහා ඔවුන් පත් කළ යුතු අතර, නැවත පත් කරනු ලැබීමට ඔවුහු සුදුසුකම් නොලබනු ඇත.

සාමාජිකයන්/විනිසුරුවරුන් හත් දෙනාම අධිකරණයේ විනිශ්චයාසනාරූඪ විය යුතුය. මෙම අධිකරණය අධිකරණ සංවිධාන ව්‍යුහය තුළට ඇතුළත් නොවේ. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව ප්‍රකාරව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණයෙහි අධිකරණ බලයට යටත් වන කිසියම් ගැටලුවක් රටෙහි කිසියම් අධිකරණයක් ඉදිරියෙහි විභාග වන නඩුවකදී පැන නඟිනු ලබයි නම්, එකී ගැටලුව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණය වෙත යොමු කළ යුතු වේ.

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා අධිකරණයෙහි අධිකරණ බලය පහත දැක්වෙන පරිදි වේ:-

(අ) කිසියම් කරුණක්/ගැටලුවක් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව අර්ථ නිරූපණය කිරීමේ විෂය පථයට ඇතුළත් වේද යන්න තීරණය කිරීමේ බලය ඇතුළුව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව අර්ථ නිරූපණය කිරීමේ බලය.

(ආ) පනත් කෙටුම්පත්වල අධිකරණ සමාලෝචනය.

(ඇ) නීති හා ව්‍යවස්ථාවල අධිකරණ සමාලෝචනය.

(ඈ) මධ්‍යම ආණ්ඩුව සහ/හෝ පළාත් අතර ඇති වන ගැටලු.

(ඉ) පාර්ලිමේන්තුවෙහි වරප්‍රසාද කඩ කිරීම.

(ඊ) තම අධිකරණය විසින්ම ලබා දෙන ලද තීන්දු සමාලෝචනය කිරිම.

## நீதித்துறை பற்றிய உப குழுவின் அறிக்கை

**1.** நீதித்துறை பற்றிய உப குழு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தியது. அதன் அறிக்கை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அ. நீதித்துறையின் சுதந்திரம்

ஆ. நீதிமன்றங்களின் கட்டமைப்பு

இ. நீதித்துறை மீளாய்வு உள்ளடங்கலான நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்

ஈ. அரசியலமைப்பு நீதிமன்றமும் அதன் நியாயாதிக்கமும்

### 2. நீதித்துறையின் சுதந்திரம்

தற்போதைய அரசியலமைப்பு XV ஆம் அத்தியாயத்தின் [நீதித்துறை] “நீதித்துறைச் சுதந்திரம்” எனும் உப தலைப்பின்கீழ் சில வாசகங்களைக் கொண்டிருந்தாலும், அவ்வாசகங்கள் பிரதானமாக உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகயிவற்றின் நீதிபதிகளின் நியமனம், பதவிக்காலம், பதவி நீக்கம், இளைப்பாறும் வயது மற்றும் சம்பளம் முதலிய விடயங்களுடன் தொடர்புபடுக் காணப்படுகின்றன. நாட்டின் சுயாதீன நீதித்துறையின் அவசியத்தையும் மற்றும் நீதித்துறை சார்ந்த கோட்பாட்டை உறுதிசெய்வதன் முக்கியத்துவத்தையும் குறிப்பீடுசெய்யும் எந்தவிதமான வெளிப்படுத்தல் ஏற்பாடும் அரசியலமைப்பில் கூட்டிணைக்கப்பட்டதாகவில்லை.

நாடு நீதித்துறையில் அடைந்துள்ள அனுபவத்தைக் கருத்திற்கொண்டு உப குழு, நீதித்துறை சுதந்திரத்தின் கோட்பாட்டிற்கு உத்தரவாதமளிக்கின்றதும் மற்றும் பாதுகாப்பளிக்கின்றதுமான சில ஏற்பாடுகளை அரசியலமைப்பில் உள்ளடக்க வேண்டும் என விதந்துரைக்கின்றது. நாட்டின் நிறைவேற்றுத்துறையும் சட்டவாக்கத்துறையும் சுயாதீனமாக இருத்தல் வேண்டும் என்பதையும் நீதித்துறையின் தத்துவங்களில் தலையிடும் அதிகாரம் எந்தவோர் அதிகார சபைக்கும் இல்லை என்பதையும் அரசியலமைப்பினால் தெளிவாக வெளிப்படுத்த முடியும். நீதிபதிகள் அவர்களின் செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றுகையில், எவரேனும் நபர் ஒருவரிடமிருந்து அல்லது அதிகார அமைப்பிடமிருந்து வரும் எவ்வித நேரடியான அல்லது மறைமுகமான தடைகள், அழுத்தம், இடையீடு, தூண்டுதல், அச்சுறுத்தல் முதலியவற்றிலிருந்து விடுபட்டு, உண்மையான விடயங்கள் என அவர்கள் ஊகிக்கும் விடயங்களுக்கு சட்டத்தைப் பிரயோகித்து அவர்களின் மன நீதிக்கும் மனசாட்சிக்கும் இணங்க செயற்படும் வகையில் அரசியலமைப்பு மேலும் ஏற்பாடுகளை செய்து வழங்கலாம்.

இது தொடர்பில் தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு சிறந்த வழிகாட்டலை வழங்குகின்றது. “நீதிமன்றங்கள் சுயாதீனமானவை, அந்த நீதிமன்றங்கள் அரசியலமைப்புக்கும் சட்டத்திற்கும் மாத்திரமே கட்டுப்பட்டவை. சட்டத்தை பக்க சார்பற்றதாகவும், அச்சமின்றியும் பரிவு இன்றியும் பங்கம் இன்றியும் பிரயோகிக்க

வேண்டும். “நீதிமன்றங்களின் செயற்பாட்டில் எந்தவோர் நபரோ அல்லது அரச பிரிவினரோ தலையிடக் கூடாது.” அரசின் பிரிவுகள் சட்டவாக்கத்தினூடாகவும் ஏனைய நடவடிக்கைகளினூடாகவும் நீதிமன்றங்களின் சுயாதீனத்தையும், பக்க சார்பற்ற தன்மையையும், நன்மதிப்பையும், அணுகத்தகுதன்மையையும் மற்றும் பயன்தகுதன்மையையும் உறுதிப்படுத்துவதற்கும் அதே நேரம் நீதிமன்றங்களைப் பாதுகாப்பதற்கும் உதவ வேண்டும்” என 165 ஆம் உறுப்புரை எடுத்துரைக்கின்றது.

மக்களின் நியாயாதிக்க அதிகாரத்தத்துவம் அரசியலமைப்பினால் நேரடியாக நீதித்துறைக்கு உரித்தளிக்கப்படுதல் வேண்டும் என்பது அவசியமானதும் விரும்பத்தக்கதுமாகும். நீதிமன்றங்கள், நியாயாதிக்க சபைகள் முதலியவற்றினூடாக பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுகின்ற தற்போதைய நிலை திருப்தியற்றதாகக் காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். இவை நீதித்துறையின் சுயாதீனக் கோட்பாட்டை மேலும் வலுப்படுத்தும்.

வேறுவகையில் கூறுவதானால், நீதித்துறைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்க அதிகாரத் தத்துவங்களை விஷேட சந்தர்ப்பங்களில் நிறைவேற்றும் பொருட்டு விஷேட நியாயாதிக்க அதிகாரத்தத்துவங்களையும் மற்றும் பிரதியீட்டு பிணக்குத் தீர்த்தல் அதிகாரத்தத்துவங்களையும் பிரயோகிக்கும் காதி நீதிவான் நியாயாதிக்க சபைகள் போன்ற நிறுவனங்கள் பாராளுமன்றத்தின் மூலம் அமைக்கப்படலாம்.

இந்த வெளிப்படுத்தல் உத்தரவாதங்கள் உயர் நீதிமன்றங்களினதும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களினதும் நீதிபதிகளின் நியமனம், இளைப்பாறல், பதவி விலக்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, சம்பளங்கள், ஓய்வூதிய நன்மைகள், ஓய்வூதியத்தின் பின்னரான தொழில், ஏனைய சேவைகள் தொடர்பான அவர்களின் ஈடுபாடு முதலியவற்றுடன் தொடர்புடைய உத்தரவாத விடயங்களுக்கு மேலதிகமானவையாகும்.

இவை தொடர்பாக, பின்வரும் சிபாரிசுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

### குறிப்பு: நியமனம்

உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள், உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகள் அடங்கிய ஒரு குழாமிலிருந்து பெயர் மனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ள அரசியலமைப்பு சபையினது சிபாரிசின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். முன்னாள் நீதிபதிகள் அடங்கிய அந்தக் குழு, அந்தக் குழுவுக்கான உறுப்பினர்களை நியமிப்பதில் கௌரவ சட்டமா அதிபருடனும் மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருடனும் கலந்தாலோசித்து பிரதம நீதியரசரினால் முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் அடங்கலாக நியமிக்கப்படுதல் வேண்டும். அந்த நீதிபதிகள் அடங்கிய குழாமுக்கு நியமிக்கப்பட வேண்டிய உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகள் தொடர்பில், அந்தக் குழுவுக்கு பெயர்குறிக்கப்பட்டிருக்கின்ற அவர்களின் ஓய்வுபெற்ற திகதிக்கு இடையில் ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாவது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு: ஓய்வுபெறும் வயது**

எல்லா உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும் ஓய்வு பெறும் வயது ஒரேயளவாக இருத்தல் வேண்டும், அதாவது 65 வயது விரும்பத்தக்கதாகும். சில நீதிபதிகள் ஓய்வூபெறும் போது அந்த நீதிபதிகள், அரசியலமைப்பு சபையின் சிபாரிசின் பேரில் சிறு நீதித்துறை சார்ந்த நீதிபதிகளின் தேர்ச்சியையும் சேவை வழங்கலையும் மேம்படுத்தும் பொருட்டு மேற்பார்வை செய்வதில் சேவையை வழங்கும் வகையில் சேவையில் ஈடுபடுத்தப்படலாம். இந்த நீதிபதிகள் 70 வயது வரை அவ்வாறு ஈடுபடுத்தப்படலாம்.

**குறிப்பு: நீதிபதிகளின் சம்பளங்கள்**

உயர் நீதிமன்றங்களினது நீதிபதிகளின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அந்த நீதிபதிகளின் பதவிக்காலத்தின் போது அத்தகைய சம்பளங்கள் குறைக்கப்படக் கூடாது. எல்லா உயர் நீதிமன்றங்களினதும் நீதிபதிகளின் சம்பளங்கள் ஒரேயளவாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு: ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பணிநீக்கமும்**

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஒழுக்காற்று பற்றிய ஒரு ஆணைக்குழு இருத்தல் அவசியமாகும். இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபையினால் சிபார்சு செய்யப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். இந்த ஆணைக்குழு பிழையான நடத்தை அல்லது தகவின்மை தொடர்பான ஏதாவது குற்றச்சாட்டுகளை விசாரித்து, அரசியலமைப்பு சபைக்கு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். அரசியலமைப்பு சபை அத்தகைய நீதிபதி ஒருவரை நீக்குமாறு ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்பதுடன் அந்த சிபாரின் பேரில் ஜனாதிபதி அத்தகைய நீதிபதியை நீக்கவும் வேண்டும்.எனினும், அரசியலமைப்பு சபையின் அந்த சிபாரிசானது அவ்வாறு அந்த நீதிபதியை நீக்குமாறு ஜனாதிபதிக்கு குறிப்பீடு செய்வதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு: ஓய்வூதியக் கொடுப்பனவு**

உயர் நீதிமன்ற நீதிபதிகள் அவர்கள் ஓய்வுபெறும் நேரத்தில் அவர்களுக்குக் கிடைத்த சில ஒன்றுதிரட்டிய வேதனங்கள் (சம்பளம், படிகள்) அல்லது சமகாலப்பகுதியில் நீதிபதிகளினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒன்றுதிரட்டிய வேதனங்கள் (சம்பளம் மற்றும் படிகள்) ஆகியவற்றில் எது கூடியதோ, அது அவர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பது குழுவின் கருத்தாகும்.

**குறிப்பு: சேவையிலுள்ள அல்லது ஓய்வுபெற்ற நீதிபதிகளை ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அழைத்தல்**

ஏனைய தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு நீதிபதிகளே மிகவும் பொருத்தமானவர்களாக இருக்கலாம் என்றாலும், உயர் நீதிமன்றங்களின் ஏதவாது உண்மையான அல்லது ஊகிக்கக் கூடிய சுயாதீனத்தன்மை அற்றுப்போவதை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, கடமையாற்றும் அல்லது

ஓய்வுபெற்ற நீதிபதிகளை, கட்டணம் செலுத்தப்படாத அல்லது கட்டணம் செலுத்தப்படும் ஏதாவது பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்காதிருப்பது விரும்பத்ததக்கதாகும் என்பது உபகுழுவின் கருத்தாகும். எவ்வாறாயினும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளையும் மற்றும் ஏனைய நீதிமன்றங்களின் நீதிபதிகளையும் வெளிநாட்டு நீதித்துறைகளுக்கு ஒரு சொற்ப வரையறையான காலப்பகுதிற்கு நீதித்துறையில் பணியாற்ற அவர்களை அனுமதிப்பதன்மூலம் வெளிநாட்டில் அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு உபகுழுவின் ஆட்சேபனைகள் ஏதும் இருக்காது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் பயிற்சியுடன் நிலைத்திருக்கக்கூடிய பதவிநிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படும்போது அக்காலத்தில் அவர்கள் சம்பளமற்ற நிலையில் அமர்த்தப்படுதல் வேண்டும். இந்தப் பின்னணியில், இத்தகைய அங்கீகாரத்தை வழங்குவதில், நீதித்துறை முறைமைகளும் மற்றும் வெளிநாடுகளின் ஜனநாயகப் பண்புகளும் மனதிற்கொள்ளப் படுதல் வேண்டும். இவ்வாறான வேண்டுகோள்களுக்கு அதிகாரமளிக்கக்கூடிய ஜனாதிபதிக்கு, அரசியலமைப்பு சபை தனது சிபார்சுகளை முன்வைப்பதற்கு முன்பதாக, அத்தகைய வேண்டு-கோள்களை மதிப்பீடுசெய்தல் வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில், நாட்டில் நீதியின் தரத்தை மேம்படுத்தவும் இத்தகைய குறுங்கால வரவின்மையினால் எழுகின்ற பதவி வெற்றிடங்களுக்கு முன்னணி சட்டத்தரணிகளிலிருந்து உயர் நீதிமன்றங்களுக்கு குறுகியகால சமயோசித நியமனங்களை வழங்குவது என்ற கருத்தையும் உபகுழு கொண்டிருக்கின்றது.

## 3. நீதிமன்றங்கள் கட்டமைப்பு

அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்படும் வகையில் நீதிமன்றங்களின் கட்டமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்:

உயர் நீதிமன்றம்
↓
மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும்
மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றங்கள்
↓
இலங்கை மேல்நீதிமன்றம்

ஏனைய நீதிமன்றங்களும் அவற்றின் கட்டமைப்பும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டவாக்கத்தின் மூலம் ஏற்பாடுசெய்யப்படுதல் வேண்டும். உப குழு மாவட்ட நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், முதன்னிலை நீதிமன்றம்/சிறிய கோரல்கள் நீதிமன்றம் முதலிய நீதிமன்றங்களை ஏனைய நீதிமன்றங்கள் என அங்கீகரிக்கின்றது.

## 4. நீதிமன்றங்களின் நீதிபதிகளும் நியாயாதிக்கமும்

உயர் நீதிமன்றம் பதினைந்து நீதிபதிகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். இந்த நீதிமன்றம் நாட்டில் இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதற்கு எத்தகைய மூல நியாயாதிக்கமும் கிடையாது.

**மேன்முறையீட்டு நீதிமன்றம்** நாற்பத்தைந்து நீதிபதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மாகாணங்களில் கூடுதல் வேண்டும். அத்தகைய நீதிமன்றங்கள் அந்தந்த மாகாணங்களின் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் என அழைக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் அமர்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கு இடையில் பெயர்குறித்து நீதிபதிகளை நியமிக்க வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பல்வேறு பிரிவுகள் காணப் படலாம். உதாரணமாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குற்றவியல் பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவு என்பன காணப்படலாம்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் மற்றும் எழுத்தாணை நியாயாதிக்கம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். மேன்முறையீட்டு நீதிமன்றம் முதன்னிலை நீதிமன்றங்களான உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றங்கள்/சிறு கோரிக்கை நீதிமன்றங்கள் ஆகியவற்றிலிருந்தும் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும். தொழில் நியாயசபை, கமநல நியாயசபை மற்றும் அவற்றையொத்த காதி நீதி மன்றங்கள் முதலிய சட்டமன்றங்களிலிருந்து கிடைக்கும் மேன்முறையீடுகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படலாம்.

**இலங்கை மேல் நீதிமன்றம்**

மேல் நீதிமன்றம் கடுமையான குற்றச் செயல்கள் மீதான குற்றவியல் நியாயாதிக்கத்தை மாத்திரமே பிரயோகிக்கும். மேல் நீதிமன்றத் தீர்ப்புக்களிலிருந்து எழுகின்ற மேன்முறையீடுகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குற்றவியல் பிரிவினால் அல்லது கொழும்பிலுள்ள குற்றவியல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுதல் வேண்டும்.எழுத்தாணை நியாயாதிக்கத்தை அல்லது மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை உயர்நீதிமன்றம் கொண்டிராது.

## 5. அரசியலமைப்பு நீதிமன்றமும் அதன் நியாயாதிக்கமும்

அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிலுள்ள பிரச்சினைகள் அத்துறை சார்ந்த நிபுணர்களால் விளங்கித் தீர்க்கப்பட வேண்டியதற்கான தேவையை உணர்ந்து, அரசியலமைப்புப் பேரவையினது சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை/ நீதிபதிகளை உள்ளடக்கிய அரசியலமைப்பு நீதிமன்றமொன்று தாபிக்கப்படுவதை உப குழு விதந்துரைக்கின்றது. சட்டத்துறையிலும் சட்ட செயன்முறைப் பிரயோகத்திலும் நிபுணத்துவம் வாய்ந்த அல்லது அரசியலமைப்பு சட்டத்தில் விஷேட அறிவுடைய சட்டக் கல்வித் தகைமை வாய்ந்த ஆட்களுக்கு மத்தியிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். இவர்கள் ஐந்து வருட காலத்துக்கு நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் மீண்டும் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

நீதிமன்றம் என்ற ரீதியில் ஏழு உறுப்பினர்கள்/ நீதிபதிகள் அமர வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்படுகின்றது. இந்த நீதிமன்றம் நீதிமன்றக் கட்டமைப்புக்குள் வராது. அரசியலமைப்பின் பிரகாரம் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்குள் வரும் ஏதேனும் கருமம் நாட்டின் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள ஏதேனும் வழக்கில் எழுமிடத்து அத்தகைய கருமம் அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கு குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பின்வருமாறு அமைதல் வேண்டும்:

அ) ஒரு கருமம்/விடயம் அரசியலமைப்பின் பொருள்கோடல் பரப்பெல்லைக்குள் வருகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கான அதிகாரம் உட்பட அரசியலமைப்புக்கு பொருள்கோடல் வழங்கல்;

ஆ) சட்டமூலங்களின் நீதிமுறை மீளாய்வு;

இ) சட்டங்களினதும் நியதிச்சட்டங்களினதும் நீதிமுறை மீளாய்வு;

ஈ) மத்திய அரசுக்கும் மற்றும் மாகாணங்களுக்கும் இடையிலும் மற்றும்/அல்லது அவற்றுக்கு மத்தியிலும் எழும் விடயங்கள்;

உ) பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறல்;

ஊ) அதன் சொந்தத் தீர்ப்புகளின் மீளாய்வு;

## Sub-Committee on Judiciary

## REPORT

1. The Report of the Sub-Committee on Judiciary focused on the following issues and its report is based on those issues:

   a) Independence of the Judiciary
   b) Courts' Structure
   c) Courts' Jurisdiction including Judicial Review
   d) Constitutional Court and its Jurisdiction

**2. Independence of the Judiciary**

Although the present Constitution contains in Chapter XV [The Judiciary] a few Articles under the sub-title "Independence of the Judiciary", those Articles deal with primarily with the appointment, tenure, removal, age of retirement, salaries of judges of the Supreme Court and the Court of Appeal, there is no express provision incorporated in the Constitution which lays down the requirement and importance of ensuring the principle of judicial independence in the country.

Taking into consideration the experience which the country has undergone in the judicial sphere, the Sub-Committee recommends that it is desirable to incorporate some express provisions in the Constitution guaranteeing and securing the principle of judicial independence. The Constitution can make it clear that the judiciary shall be independent of the executive and legislative organs of the State and that no authority shall have any

power to interfere with the judicial functions and processes. The Constitution can further provide that the judges shall, in the performance of their functions and duties, act without any restriction, pressure, interference, inducement, intimidation, direct or indirect, from any person or authority and

shall act according to their judicial conscience and applying the law to the facts as they deem the law and facts are.

In this respect, the Constitution of South Africa provides good guidance. In terms of Article 165, it is provided that "the Courts are independent and subject only to the Constitution and the law, which they must apply impartially and without fear, favour or prejudice", that "no person or organ of state may interfere with the functioning of the courts" and that "organs of state, through legislative and other measures, must assist and protect the courts to ensure the independence, impartiality, dignity, accessibility and effectiveness of the courts."

It is also necessary and desirable that the judicial power of the People has to be vested directly in the Judiciary by the Constitution. The present position of it being exercised by Parliament through courts, tribunals, etc., is unsatisfactory and should be altered. These will also further strengthen the principle of judicial independence.

On the other hand, institutions exercising specialized adjudicatory powers and alternative dispute resolution powers, viz., quasi-judicial bodies, may be set up by Parliamentary legislation in specific cases to complement the judicial power vested in the Judiciary.

These express guarantees are in addition to the guarantee with regard to the appointment, tenure, retirement, removal, disciplinary control, salaries, retirement benefits, employment after retirement, engagement of them with regard to other services etc. of the Supreme Court and Court of Appeal judges.

In these respects, the following recommendations are made:

**Re Appointment:**

Judges of the superior courts shall be appointed by the President on the recommendation by the Constitutional Council, which has received nominations from a panel of former judges of the Supreme Court. The panel

of former judges, including a former Chief Justice, shall be nominated by the sitting Chief Justice who shall consult the Hon. Attorney General and the President of the Bar Association in nominating the members to the Panel. For the former Judges of the Supreme Court to be nominated to the Panel, a minimum period of two years must have lapsed between their date of retirement and being nominated to the Panel.

**Re Age of Retirement:**

The age of retirement of judges of all the superior courts shall be the same, preferable, 65 years of age. Some of the judges when they retire could be engaged, on the recommendation of the Constitutional Council, to provide service in overseeing and mentoring the judges of the minor judiciary to develop and improve upon their competence and service delivery. These judges can go up to 70 years of age.

**Re Salaries of Judges:**

The salaries of judges of superior courts shall be fixed by Parliament and they shall not be reduced during the tenure of the judges. The salaries of judges of all superior courts shall be the same.

**Re Disciplinary Control & Dismissal:**

There shall be a Superior Courts Judges Disciplinary Commission, the members of which shall be recommended by the Constitutional Council and appointed by the President, which shall inquire into any allegations of misconduct or incapacity and submit a report to the Constitutional Council. The Constitutional Council shall have authority to recommend the removal of any such judge to the President who shall thereupon remove such judge. However, the recommendation of the Constitutional Council shall be approved by Parliament before it is sent to the President for removal.

**Re Retirement Payment:**

It is the opinion of the Committee that the judges of the superior courts shall be paid the same consolidated emoluments (salary and allowances) that they obtained at the time of their retirement or whatever the consolidated emoluments (salary and allowances) that are received by the judges of the contemporary period whichever is more.

**Re Inviting serving or retired judges to perform other functions:**

Although the judges may be well suited to be engaged in other functions, the Sub Committee is of opinion that it is desirable not to permit any sitting or retired judges to accept any paid or unpaid role in order to avoid any real or perceived lack of independence of the judges of the superior courts. However, the Sub-Committee is not averse to the idea of judges of the superior courts and other courts being given opportunities to foreign exposures by permitting them to work for a few limited spells in foreign jurisdictions. When superior court judges are permitted to accept positions tenable with their standing and training, they should be placed on no-pay during that period. In this context, the judicial systems and democratic nature of the foreign countries must be borne in mind in granting this approval. The Constitutional Council shall have to evaluate such requests before making its recommendation to the President who shall have the authority to grant such requests.

In this context, the Sub-Committee also holds the view that short-term ad-hoc appointments to the superior courts could be made from leading practitioners to tide over the vacancies arising out these short spells of absence and to enrich and uplift the quality of justice in the country.

## 3. The Courts Structure

The following shall be the structure of courts to be recognized by the Constitution.

**Supreme Court**

↓

**Court of Appeal & Provincial Courts of Appeal**

↓

**High Court of Sri Lanka**

The other courts and their structure shall be provided for by the legislation passed by Parliament. The Sub-Committee recognizes that the other courts can be the District Court, Family Court, Magistrate's Court, Primary Court/Court of Small Claims.

## 4. The Composition & Jurisdiction of the Courts

**The Supreme Court** shall consist of fifteen judges. The Court shall have the final appellate jurisdiction in the country. It will not have any original jurisdiction.

**The Court of Appeal** shall have forty five judges. The Court of Appeal shall sit in the Provinces and they shall be known as the respective Provincial Court of Appeal. The President of the Court of Appeal shall nominate from among the judges of the Court of Appeal to sit in the Provincial Court of Appeal. There can be different divisions of the Court of Appeal. For instance, there could be Criminal Division and Commercial Division of the Court of Appeal.

The Court of Appeal will have the fundamental right jurisdiction and writ jurisdiction. The Court will also have appellate jurisdiction from the courts of first instance, viz., the High Court, District Court, Family Courts and Magistrates' Court Primary Courts /Small Claims Courts. The appeals from the Labour Tribunal, Agrarian Services Tribunal and similar quasi-judicial bodies can also be heard by the Court of Appeal.

**The High Court of Sri Lanka**

The High Court will only exercise criminal jurisdiction over grave crimes. The appeals from the judgements of the High Court shall be heard by the Criminal Division of the Court of Appeal or Criminal Court of Appeal in Colombo. The High Court will not have any writ jurisdiction or appellate jurisdiction.

## 5. Constitutional Court & its Jurisdiction

Realizing the need for the adjudication of issues of Constitutional importance by specialists in the field, the Sub Committee recommends the establishment of a Constitutional Court consisting of seven members/judges who are appointed by the President on the recommendation of the Constitutional Council. The members shall be chosen from among persons who have distinguished themselves in the judicial sphere and legal practice or legal education with specialized knowledge on Constitutional Law. They shall be appointed for a term of five years and they will not be eligible for reappointment again.

It is also recommended that all seven members/judges shall sit as the Court. This Court will not fall within the court structure. Where any matter which falls within the jurisdiction of the Constitutional Court as per the Constitution, arises in any case before any court in the country, such matter shall be referred to the Constitutional Court.

The jurisdiction of the Constitutional Court shall be as follows:

a) Interpretation of the Constitution, including the authority to determine whether a matter/issue falls within the ambit of interpretation of the Constitution;
b) Judicial Review of Bills;
c) Judicial Review of Laws & Statutes;
d) Issues arising between and/or among the Centre and Provinces;
e) Breach of privileges of Parliament;
f) Review of its own judgments.